(2) அரசாங்கம் அல்லது தனியார் துறை நிறுவனமொன்றில் ஏற்புடைய துறையில் ஓராண்டு அல்லது அதற்கு மேற்பட்ட காலப்பகுதிக்கு அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

உ. **மின்னியல் தொழில்வினைஞர்** (Electrical Artificer) ( **வகுப்பு** IV)

(1) NVQ V மட்டத்தில் மின் பொறியியல்/மின் மற்றும் இலத்திரனியல் பொறியியல்/தொழில்நுட்ப தன்னியக்கம்/ எந்திர இலத்திரனியல் பொறியியல் டிப்ளோமா கற்கைநெறியை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**விசேட தகைமைகள் -**

(அ) தொழில்நுட்பவியல் தேசிய டிப்ளோமா (NDT) வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

அல்லது

(ஆ) உயர் தேசிய பொறியியல் டிப்ளோமா (HNDF) வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

அல்லது

(இ) பொறியியல்தேசிய டிப்ளோமா (NDES) வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

அல்லது

(ஈ) தொழில்நுட்பம் மற்றும் கல்வி தொடர்பான தேசிய டிப்ளோமா வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(உ) மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவால் (TVEC) அங்கீகரிக்கப்பட்ட நிறுவன மொன்றில் அல்லது அதற்கு இணையான தகைமைகளை வழங்கும் ஆற்றல் உள்ள நிறுவனமொன்றில் (அரசாங்கம் அல்லது தனியார்) NVQ V/VI மட்டத்தில் மின்பொறியியல்/ மின் மற்றும் இலத்திரனியல் பொறியியல்/ தொழில்நுட்ப தன்னியக்கம்/ எந்திர இலத்திரனியல் பொறியியல் டிப்ளோமா கற்கைநெறி வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(2) அரசாங்கம் அல்லது தனியார் துறை நிறுவனமொன்றில் ஏற்புடைய துறையில் ஓராண்டு அல்லது அதற்கு மேற்பட்ட காலப்பகுதிக்கு அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

ஊ. **வானலை தொழில்வினைஞர்** (Radio Electronic Artificer) (**வகுப்பு** IV)

(1) NVQ V மட்டத்தில் இலத்திரனியல் பொறியியல்/ தொலை தொடர்பு பொறியியல்/ வலையமைப்பு போன்ற பிரிவுகளில் டிப்ளோமா கற்கைநெறி வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**விசேட தகைமைகள் -**

(அ) தொழில்நுட்பவியல் தேசிய டிப்ளோமா (NDT) வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

அல்லது

(ஆ) உயர் தேசிய பொறியியல் டிப்ளோமா (HNDF) வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

அல்லது

(இ) பொறியியல் தேசிய டிப்ளோமா (NDES) வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

அல்லது

(ஈ) தொழில்நுட்பம் மற்றும் கல்வி தொடர்பான தேசிய டிப்ளோமா வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(உ) மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவால் (TVEC) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் அல்லது அதற்கு இணையான தகைமைகளை வழங்கும் ஆற்றல் உள்ள நிறுவனமொன்றில் (அரசாங்கம் அல்லது தனியார்) NVQ V/VI மட்டத்தில் இலத்திரனியல் பொறியியல்/மின் தொலைத்தொடர்பு பொறியியல்/ வலையமைப்பு போன்ற, பொறியியல் டிப்ளோமா கற்கைநெறி வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(2) அரசாங்கம் அல்லது தனியார் துறை நிறுவனமொன்றில் ஏற்புடைய துறையில் ஓராண்டு அல்லது அதற்கு மேற்பட்ட காலப்பகுதிக்கு அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்

6. மேற்குறித்த 2 மற்றும் 4 பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளை பூர்த்தி செய்யாத விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். முதலாவது நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளித்தவுடன் உயரம், நிறை, பார்வை மட்டம் என்பன பரிசீலிக்கப்படும். வர்த்தமானியில் குறித்துரைக்கப்பட்ட உயரம், நிறை, பார்வை மட்டம் ஆகியவற்றைக் கொண்டிராதவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்படமாட்டார்கள். தேர்வுநாடியின் உயரம் உரிய அளவில் இல்லாதிருப்பினும் கடற்படைக்கு நன்மை பயக்கும் விசேட தொழில் திறமை பெற்றிருப்பின் கடற்படை தளபதியின் அனுமதியுடன் அவரைப் பற்றி கவனத்தில் எடுக்கப்படும்.

7. **சேவை நிபந்தனைங்கள் :**

அ. விண்ணப்பதாரிகள் தொழில்வினைஞர் பிரிவில் III மற்றும் IV ஆகிய வகுப்புகளின் கடற்படை வீரர்களாக ஆட்சேர்ப்புச் செய்யப்படுவதுடன், அவர்கள் அடிப்படைப் பயிற்சி நெறிகளை கற்றல் வேண்டும்.

ஆ. பயிலுநர்களாக பயிற்சி பெறும் காலப்பகுதியிலும் அதன் பின்னரும் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட கடற்படை வீரர்கள் கடற்படைச் சட்டத்திற்கு கட்டுப்படுதல் வேண்டும்.

இ. ஒவ்வொரு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட கடற்படை வீரருக்கும் சகல சின்னங்களுடனான சீருடைகள் மற்றும் உபகரணங்கள் என்பன வழங்கப்படும்.

ஈ. பயிற்சிக் காலத்தின் போது ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட கடற்படை வீரர்களுக்கு தங்குமிட வசதி மற்றும் உணவுகள் கடற்படையினால் வழங்கப்படும்.

உ. பயிற்சியில் ஈடுபட்டிருக்கும் காலப்பகுதியில் எவரேனுமொரு வீரருக்கு தமது படைவீரர் தன்மையை சுய விருப்புடன் இடைநிறுத்துவதற்கு தேவைப்பட்டால், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மூலம் கடற்படை வீரர் பொருட்டு அது வரையில் மேற்கொள்ளப்பட்டுள்ள அனைத்து செலவினங்களையும் குறித்த படைவீரரால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கு மீளச் செலுத்தல் வேண்டும்.

ஊ. பயிற்சிக் காலத்தின் போது எந்தவொரு சந்தர்பத்திலும் எவரேனுமொரு கடற்படை வீரரின் துர்நடத்தை காரணமாக அல்லது அவரால் (ஆண்/பெண்) பொறுப்புக் கூறவேண்டிய ஏதேனுமோர் காரணத்திற்காக அல்லது அவர் (ஆண்/ பெண்) கடற்படை சேவைக்காக பொறுத்தமற்றவரென பொறுப்பிலுள்ளவர்களினால் தீர்மானம் எடுக்கப்படுமேயானால் அந்தச் சந்தர்ப்பத்திலயே சம்பந்தப்பட்ட கடற்படை வீரரால், அதுவரை அவரின் பொருட்டு (ஆண்/ பெண்) மேற்கொண்டுள்ள அனைத்து செலவுகளையும் இலங்கை கடற்படைக்கு மீளச்செலுத்துவதற்கு ஒப்புக்கொள்வதாக இலங்கை குடியரசின் பிரதிநிதியாக கடற்படை தளபதியுடன் ஓர் உடன்படிக்கைக்கு வருதல் வேண்டும்.

எ. எல்லா கடற்படை வீரர்களும் கடமைக்காக அல்லது பயிற்சிக்காக எச்சந்தர்ப்பத்திலும் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திற்கு அல்லது வெளிநாட்டிற்கு அனுப்பப்படுவதற்கு ஆளாவார்.

*8. **அரசகரும மொழித் தேவைப்பாடுகள்**- தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச் சட்டத்தின் அரசகரும மொழிக் கொள்கையினை நடைமுறைப்படுத்தும் வகையில் தற்போதுள்ளதும், இனிவருங் காலங்களில் விதிக்கப்படுகின்றதுமான கட்டளைகள் மற்றும் உறுப்புரைகள் என்பவற்றுக்கு ஒழுங்கமைதல் வேண்டும்.*

*9. **சம்பளமும் கொடுப்பனவுகளும் :***

*2020.01.01 ஆம் திகதியிலிருந்து முகாமைத்துவச் சேவை சுற்றறிக்கை இலக்கம் 03/2016 இன் பிரகாரம் சம்பளம் செலுத்தப்படும். அதற்கமைய,*

| | | |
|---|---|---|
| (அ) | அடிப்படைச் சம்பளம் | - ரூபா 33,490.00 |
| (ஆ) | வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு | - ரூபா 17,800.00 |
| (இ) | சீருடை பேணுதல் கொடுப்பனவு | - ரூபா 350.00 |
| (ஈ) | கஷ்டப் பிரதேச கொடுப்பனவு (நடவடிக்கை பிரதேசங்களின் பொருட்டு) | - அடிப்படைப் பயிற்சியின் பின் உரித்தாகும் |
| (உ) | கஷ்டப் பிரதேச கொடுப்பனவு (நடவடிக்கை சேவையல்லாத பிரதேசங்களின் பொருட்டு) | - அடிப்படைப் பயிற்சியின் பின் உரித்தாகும் |
| (ஊ) | ஏனைய கொடுப்பனவுகள் | - விசேட கொடுப்பனவு ரூபா 1000.00<br>விசேட மேலதிக கொடுப்பனவு ரூபா 2400.00 |
| (எ) | இடைக்கால கொடுப்பனவு | - ரூபா 5000.00 |
| | குறைந்தபட்ச முழு சம்பளம் (திருமணமாகாத) | - ரூபா 60,040.00 |
| | (திருமணமான வெளியே வசிக்கும்) | - ரூபா 91,465.00 |

(ஏ) இலவசமாக புகையிரதத்தில் பயணிக்க கூடியவாறு மூன்று சோடி புகையிரத அனுமதிப் பத்திரங்கள் ஓராண்டுக்கு (ஏற்றவாறு கடற்படை வீரர், வாழ்க்கைத் துணை, பிள்ளைகள் மற்றும் தங்கியிருப்போருக்கு) உரித்தாகும்.

(ஐ) முகாமில் வசிக்கும் கடற்படையினருக்கு மாதமொரு தடவை விடுதியிலிருந்து தனது சொந்த இருப்பிடத்திற்கு போய்வருவதற்கு மேலதிமாக ஒரு சோடி புகையிரதப் பிரயாண அனுமதிப்பத்திரம் அல்லது பேருந்து வண்டி கட்டணம் செலுத்தப்படும்.

(ஒ) இலவசமாக மருத்துவ வசதிகள் வழங்கப்படும். (ஏற்றவாறு கடற்படை வீரர், வாழ்க்கைத் துணை, பிள்ளைகள் மற்றும் தங்கியிருப்போருக்கு)

(ஓ) அரசாங்க குடிமனைகளில் தங்கியிராத திருமணமான கடற்படையினருக்கு ரூபா 2,400.00 இலிருந்து ரூபா 6.600.00 வரை வாடகைக் கொடுப்பனவாக வழங்கப்படும்.

(ஔ) திருமணமான கடற்படையினருக்காக திருமணமாகியவர்களுக்கான தங்குமிடங்களில் வெற்றிடங்கள் ஏற்படும்போது அதற்கமைவாக விடுதிகள் வழங்கப்படும். இதற்கான வாடகையை அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்றவாறு வசூலிக்கப்படும்.

10. **விண்ணப்பதாரிகளுக்கான அறிவுறுத்தல்கள் :**

(அ) விண்ணப்பதாரிகள் பின்வரும் படிவத்தின்படி விண்ணப்பத்தில் எல்லா பந்திகளையும் இயன்ற மட்டும் விபரங்களுடன் தெளிவாக தமது கையெழுத்தால் பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும். விண்ணப்பங்கள் 2024, யூலை மாதம் 07 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன் "சிரேட்ட பதவிநிலை அலுவலர் (ஆட்சேர்ப்பு), கடற்படை தலைமையகம் த. பெ. இல. 593, கொழும்பு" என்ற முகவரிக்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். பதிவுத் தபாலில் அனுப்பாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையில் இடதுபக்க மேல் மூலையில் "இலங்கை நிரந்தரக் கடற்படையின் தொழில்வினைஞர் பிரிவிடம் நேரடியாக கடற்படை வீரர்களை ஆட்சேர்ப்புச் செய்தல்" என்று குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி மற்றும் நேரத்திற்கு பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்களும் இந்த அறிவித்தலின் தேவைப்பாடுகளுக்கு அமையாத விண்ணப்பங்களும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. மேற்படி விபரங்களை www.navy.lk இணையத்தளத்தில் அல்லது 0117195162, 011-7195155 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாகப் பெற்றுக்கொள்ளலாம்.

(ஆ) அரசாங்க சேவையில்/ கூட்டுத்தாபனங்களில்/ சபைகளில்/ சிவில்நிறுவனங்களில் சேவையிலுள்ள விண்ணப்பதாரர்களது விண்ணப்பங்கள் தத்தமது திணைக்களத்தின்/சபையின்/கூட்டுத்தாபனத்தின்/குடியியல் நிறுவனத்தின் தலைவர்கள் ஊடாக, தெரிவு செய்தால் விடுவிக்க முடியுமென்ற சான்றிதழுடன் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

(இ) விண்ணப்பதாரர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் போது அல்லது வேறொரு சந்தர்ப்பத்தில் அழைக்கப்படும் போது விண்ணப்பதாரிகள் பின்வருவனவற்றின் மூலப்பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும்.

(1) பிறப்புச் சான்றிதழ் ;

(2) விண்ணப்பித்த பிரிவுகளுக்கு ஏற்புடையதான கல்வித் தகைமைகள் உள்ளதென உறுதிப்படுத்துவதற்கு கல்விச் சான்றிதழ்கள்;

(3) பாடசாலை விலகல் சான்றிதழ்;

(4) 06 மாத காலப் பகுதிக்கு பெறப்பட்ட கிராம அலுவலர் சான்றிதழ்;

(5) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து பெறப்பட்ட தொழில்சார்/ தொழில்நுட்ப பயிற்சி மற்றும் அனுபவம் இருப்பின் அதற்கான சான்றிதழ்கள்;

(6) சமீபத்தில் பெறப்பட்ட மூன்று நற் சான்றிதழ்கள், அதில் ஒன்று விண்ணப்பதாரர் கடைசியாக கல்வி கற்ற பாடசாலை அதிபரினதும், மற்றைய சான்றிதழ்கள் இரண்டு வருடங்களுக்கு மேலாக விண்ணப்பதாரரை அறிந்துள்ளவரான பொறுப்பு வாய்ந்த ஒருவரினதும் அல்லது தற்போது தொழில் வழங்கியுள்ள ஒருவரினதுமாக (தொழில் செய்பவராயின்) இருத்தல் வேண்டும்;

(7) விளையாட்டுத்துறைகள் மற்றும் ஏனைய செயற்பாடுகள் பற்றிய சான்றிதழ்கள்.

(ஈ) ஆவணங்களை சமர்ப்பிக்குமாறு வேண்டப்படும் சந்தர்ப்பங்களில் அவற்றை சமர்ப்பிக்கத் தவறியவர்களின் விண்ணப்பங்கள் தொடர்பாக கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.

(உ) வேறு ஆவணங்களோ ஆவணங்களின் பிரதிகளையோ விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கப்படுதலாகாது.

(ஊ) விண்ணப்பப்படிவத்துடன் சேர்த்து சான்றிதழ்களின் எவையேனும் மூலப்பிரதிகள் அனுப்பப்பட்டிருப்பின் அவை காணாமற் போதல் தொடர்பாக கடற்படை பொறுப்பு கூறப்படமாட்டாது.

11. விண்ணப்பப்படிவத்தில் பொய்யான கூற்று வழங்கியிருப்பின், அத்தகைய கூற்று விண்ணப்பதாரி (ஆண்/பெண்) தெரிவு செய்வதற்கு முன்னர் அறிய வருமாயின், அவரது பரீட்சார்த்த உரிமை இரத்துச் செய்வதற்கும், தெரிவு செய்த பின்னர் அறிய வருமாயின் அவரை (ஆண்/பெண்) சேவையிலிருந்து பணி நீக்கம் செய்வதற்கும் உள்ளாதல் வேண்டும்.

12. தெரிவு செய்தல்/நேர்முகப் பரீட்சை முதலியன -

(அ) மேற்கூறப்பட்டுள்ள தேவைகளை பூர்த்தி செய்கின்ற விண்ணப்பதாரிகளின் பொருட்டு இலங்கை கடற்படையினால் நடாத்தப்படும் அடிப்படை மருத்துவ சோதனையில் தேர்ச்சியடைதல் வேண்டும். அச்சோதனையில் தேர்ச்சியடைந்த விண்ணப்பதாரர்கள் மாத்திரம் கீழ்க் குறிப்பிட்டுள்ள உடல் உறுதித் தேர்வில் தேர்ச்சியடைதல் வேண்டும். உடல் உறுதித் தேர்வில் தேர்ச்சியடைந்த விண்ணப்பத்தாரிகள் தெரிவுச் சபையின் நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளித்தல் வேண்டும்.

(ஆ) உடல் உறுதித் தேர்வில் தேர்ச்சியடைவதற்கான தேவைப்பாடுகள் -

| பயிற்சி | நேரம் (நிமிடம்/ செக்கன்) | ஆண் | பெண் |
|---|---|---|---|
| 1600 மீற்றர் ஓட்டம் | | 09 நிமிடம் | 11 நிமிடம் |
| Push up | 01 நிமிடம் | 12 தடவை அல்லது அதற்கு அதிகமாக | 08 தடவை அல்லது அதற்கு அதிகமாக |
| Sit up | 01 நிமிடம் | 10 தடவை அல்லது அதற்கு அதிகமாக | 07 தடவை அல்லது அதற்கு அதிகமாக |

(இ) நேர்முகப் பரீட்சைக்குத் தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்திகளுக்கு அத்தகைய நேர்முகப் பரீட்சைக்கான இடம், நேரம், திகதி என்பன அவர்கள் வழங்கியுள்ள கைபேசி இலக்கத்திற்கு ஏற்புடையதான வட்ஸ்அப் செய்தி (Whatsapp) அல்லது இலத்திரனியல் அஞ்சல் மூலம் மட்டும் அறிவிக்கப்படுவதுடன், அஞ்சல் மூலம் அல்லது வேறு எந்தவொரு முறையிலும் அறிவிக்கப்படமாட்டாது. நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளித்தல் தொடர்பாக பிரயாணச் செலவுகள் அல்லது பிற செலவுகள் வழங்கப்படமாட்டாது.

(ஈ) விண்ணப்பதாரர் (ஆண்/பெண்) நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள தேசிய ஆளடையாள அட்டையை சமர்ப்பித்தல் வேண்டும்.

(உ) இறுதி நேர்முகப் பரீட்சையின் பின்னர் பொருத்தமாகக் கூடியவரான விண்ணப்பதாரிகளை கடற்படை மருத்துவச் சபைக்கு சமுகமளிக்கும் படி தேவைப்படுத்தப்படுவர்.

(ஊ) விண்ணப்பதாரர் (ஆண்/ பெண்) ஒருவரை சிபாரிசு செய்வதற்கு எண்ணுகின்ற எவராயினும் அவ்வாறு சிபாரிசு செய்வது, அவருக்கு சான்றிதழ் ஒன்றை வழங்குவதன் மூலமேயாகும். விண்ணப்பதாரர் ஒருவரை தெரிவு செய்வதற்கு எவ்விதத்திலேனும் தூண்டுவித்தல் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க முயற்சித்தல் விண்ணப்பதாரரை தகுதியிழக்கச் செய்யும்.

(எ) ஆட்சேர்ப்பு செய்வதற்கு தகுதியற்ற விண்ணப்பதாரிகளுக்கு அது தொடர்பாக அறிவிக்கப்படமாட்டாது.

**குறிப்பு** - இவ் வர்த்தமானி அறிவித்தல் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் பிரசுரிக்கப்படுவதுடன் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி பதங்களுக்கிடையில் ஏதேனுமொரு இணக்கமின்மை காணப்படின் அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்கள மொழியிலான பதம் வலுவுடையதாக இருத்தல் வேண்டும்.

யூவீஎம்பீ பெரேரா,
ஆர்எஸ்பீ**, யுஎஸ்பீ, என்டியு, பீஎஸ்சீ,
துணை அத்மிரால்,
இலங்கை கடற்படை தளபதி.

இலங்கை கடற்படைத் தலைமையகம்,
த.பெ. இல. 593,
கொழும்பு 01.

## இலங்கை நிரந்தரக் கடற்படையின் தொழில்வினைஞர் பிரிவிடம் நேரடியாக கடற்படை வீரர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான விண்ணப்பம்

## APPLICATION FOR SAILORS IN THE ARTIFICER (DIRECT ENTRY) BRANCHES OF SRI LANKA REGULAR NAVAL FORCE

1. பிரசை : ..........................................................................

(இலங்கை பிரசையாயின் வம்சாவழியிலா அல்லது பதிவு முறையிலா, என்பதை குறிப்பிடுக. பதிவு முறையாயின் சான்றிதழின் திகதியையும் இலக்கத்தையும் குறிப்படுக.)

2. விண்ணப்பிக்கும் பிரிவு (முதன்மை அடிப்படையில்) : ..........................................................................

3. முழுப் பெயர் (தேசிய ஆளடையாள அட்டையின் படி) :..........................................................................

4. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் : ..........................................................................

5. நிரந்தர முகவரி : ..........................................................................

6. அஞ்சல் முகவரி : ..........................................................................

7. பிறந்த திகதி : ..........................................................................

8. வயது : வருடங்கள் :................ மாதங்கள் :...................... நாட்கள் : .................. (2024, யூலை மாதம் 07 ஆந் திகதிக்கு)

9. உயரம் :............... (அங்குலம்) மார்பு :................ (அங்குலம்) நிறை :................... (கி.கி.)

10. நிரந்தர முகவரி உரிய பொலிஸ் நிலையம் : ..........................................................................

11. மாவட்டம் : ..........................................................................

12. தேர்தல் தொகுதி : ..........................................................................

13. கிராம அலுவலர் பிரிவு :..........................................................................

14. தொலைபேசி இலக்கம் : ..........................................................................

15. வட்ஸ்ஏப் (Whatsapp) இலக்கம் : ..........................................................................

16. திருமணமானவரா/திருமணமாகாத : ..........................................................................

17. பால் (பெண்/ஆண்) : ..........................................................................

18. கல்வி கற்ற பாடசாலைகள் (ஒழுங்கு முறையில் குறிப்பிடுக) : ..........................................................................

19. பாடசாலை /பாடசாலைகள் அல்லது பல்கலைக்கழகம் பற்றிய விபரங்கள் :

| பாடசாலை/ பல்கலைக்கழகத்தின் பெயர் | சித்தியடைந்தப் பரீட்சை | பரீட்சைக்கு தோற்றிய வருடம் | சித்தியடைந்த பாடங்கள் (தரம் உட்பட) |
|---|---|---|---|
| | க.பொ.த. (சா.த.)<br>க.பொ.த. (உ.த.)<br>வேறு | | |

20. பாடசாலை/பல்கலைக்கழகத்தில் இருந்து விலகியதன் பின்னர் புரிந்த தொழில் பற்றிய விபரங்கள் :

| தொழில் தருநரின் பெயரும் முகவரியும் | தொழிலின் தன்மை | சேவைக் காலப் பகுதி | |
|---|---|---|---|
| | | இருந்து | வரை |
| | | | |

21. பெற்றோர் பற்றிய விபரங்கள் :

| முழுப் பெயர் | பிறந்த இடம் | தொழில் | தற்கால முகவரி |
|---|---|---|---|
| தந்தை<br>தாய் | | | |

22. பதவிக்காக உள்ள சிறப்பான தகைமைகள் : ..........................................................................................................................

23. விளையாட்டில் தற்போதைய சாதனைகளின் விபரங்கள் (நீங்கள் பங்குபற்றிய போட்டிகளையும் விளையாட்டு குழுக்களும் திகதிகளுடன் பெற்ற சாதனைகளுடன் குறிப்பிடுக.) : ..........................................................................................................

24. பாடசாலையில்/பல்கலைக்கழகத்தில் அல்லது வெளி அமைப்புகளில் பெற்றுள்ள வேறு சாதனைகள் (திகதிகளுடன் பெற்ற சாதனைகளை குறிப்பிடுக). : ..........................................................................................................................................

25. ஆயுதப் படையில் அல்லது தொண்டர் படையில் அல்லது பயிலிளவல் படையில் அல்லது இளம் சாரணர் இயக்கத்தில் உள்ள சேவை : ........................................................................................................................................................................

26. இலங்கை கடற்படையில் அல்லது ஆயுதப் படை ஏதேனும் சேவையில் அல்லது பொலிஸ் சேவையில் சேர்வதற்காக இதற்கு முன்பு விண்ணப்பித்துள்ளீரா? அவ்வாறாயின், விபரங்களையும் அத்தகைய விண்ணப்பித்தின் பெறுபேற்றினையும் குறிப்பிடுக:

27. சிவில் அல்லது இராணுவ நீதிமன்றத்தினால் நீங்கள் குற்றவாளியாக்கப்பட்டு அல்லது பிணையில் விடுபட்டிருந்தீர்களா? அப்படியாயின், விபரங்கள் குறிப்பிடுக : ..........................................................................................................................

28. அரசாங்கத் திணைக்களத்திலோ அல்லது அரச துறையில்/ சபையில்/ கூட்டுத்தாபனத்தில் (மத்திய வங்கி/ தேசிய வங்கி/ பல்கலைக்கழகங்கள்/ அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள கூட்டு வியாபாரங்கள், கம்பனிகள் உட்பட) சேவையில் ஈடுப்பட்டிருப்பின் சேவையிலிருந்து விலகியதன் காரணம் : ..........................................................................................

29. நற்சான்றிதழ்கள் பற்றிய விபரங்கள் :

| பெயர் | பதவிப் பெயர் | அஞ்சல் முகவரி |
|---|---|---|
| | | |

30. விண்ணப்பதாரரால் ஒப்பமிட வேண்டிய வெளிப்படுத்துகை :

மேலே என்னால் கொடுக்கப்பட்டுள்ள பதில்கள் யாவும் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வகையில் சரியானவை என்று நேர்மையாக உறுதிமொழிகிறேன். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள இலங்கை கடற்படையின் தொழில் கைவினைஞர் பிரிவிற்கு தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் தொடர்பாக மேற்கொள்கின்ற நடவடிக்கை முறைகளும், அவர்களுக்கு பொருத்தமான விதிமுறைகளும் நான் நன்கு வாசித்து புரிந்துக் கொண்டேன்.

திகதி : ..................................... ............................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

06-15

## பொதுச் சேவைகள் ஆணைக்குழு

## காணி அமைச்சின் நிறைவேற்று சேவை வகையீட்டின் தரம் III இனைச் சேர்ந்த சட்ட உத்தியோகத்தர் பதவிக்கு (திறந்த) அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல் - 2024

சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சின் காணிப் பிரிவின் நிறைவேற்றுத்தரசேவை வகையீட்டின் தரம் III இல் காணப்படும் சட்ட உத்தியோகத்தர் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டிருக்கும் தகைமைகளைப் பூர்த்திசெய்யும் இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **ஆட்சேர்ப்பு முறைமை**

இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டிருக்கும் தகைமைகளைப் பூர்த்திசெய்யும் விண்ணப்பதாரர்களுள், பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் மூலம் நியமிக்கப்படும் தகுதிகாண் மதிப்பீட்டு நேர்முகத் தேர்வுக் குழுவின் மூலம் நடாத்தப்படும் தகுதிகாண் மதிப்பீட்டு நேர்முகத் தேர்வின் பெறுபேறுகளின் அடிப்படையில் அதிக புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் அபேட்சகர் வெற்றிடத்தின் பொருட்டு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர். அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட (இலக்கம் 06 இன் கீழ்) புள்ளி வழங்கும் திட்டத்திற்கு அமைவாக தகுதிகாண் மதிப்பீட்டு நேர்முகத் தேர்வு இடம்பெறும்.

நியமனம் அமுல்படுத்தப்படும் நாள் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் மூலம் தீர்மானிக்கப்படும்.

2. **தேவையான தகைமைகள் :**

i. கல்வி / தொழில் தகைமை
உயர்நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியப் பிரமாணம் செய்திருத்தல்.

ii. **முன்னனுபவம்**
உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டதன் பின்னர் சட்டத்தரணியாக மூன்று (03) வருடங்களுக்கு குறையாத வெற்றிகரமான தொழில் முன்னனுபவத்தைப் பெற்றுக் கொண்டிருத்தல். (வெற்றிகரமான தொழிற் தகைமையினை அத்தாட்சிப்படுத்துவதன் பொருட்டு முன்வைக்கப்படும் ஆவணங்களில் தொழில் முன்னனுபவத்தைப் பெற்றுக் கொண்ட காலம், அதனை உறுதிப்படுத்துபவரின் நில முத்திரை மற்றும் திகதி என்பன தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

அல்லது

உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டதன் பின்னர் அரச நிறுவனம் ஒன்றில் சட்டத்துடன் தொடர்புடைய பதவி ஒன்றில் *மூன்று (03) வருட கால முன்னனுபவத்தைப் பெற்றிருத்தல்.

(செயலாளர் / திணைக்களத் தலைவர் / நிறுவனத் தலைவர் மூலம் வழங்கப்படும் கடிதத்தின் மூலம் அது உறுதி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்)

**குறிப்பு**:
அடிப்படைத் தகைமைகள் அத்தாட்சிப்படுத்தப்படும் ஆவணங்களின் பிரதி விண்ணப்பதாரியினாலேயே அத்தாட்சிப்படுத்தப்பட்டு விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். சேவைக் காலம் ஆரம்பமாகும் திகதி மற்றும் முடிவடையும் திகதி என்பன தெளிவாகக் குறிப்பிடப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படாதவிடத்து எவ்வித அறிவித்தல்களும் இன்றி விண்ணப்பங்கள் இரத்துச் செய்யப்படலாம்.

- சட்ட அடிப்படையிலான பதவி எனும் போது சட்டம் தொடர்பான பட்டம் அல்லது உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியப் பிரமாணம் செய்திருத்தல் இப்பதவியின் அடிப்படைத் தகைமையாகும்.

iii. **உடல் தகுதிநிலை**
சகல விண்ணப்பதாரிகளும் இலங்கையின் எந்த ஒரு பிரதேசத்திலும் சேவை செய்வதற்கும் பதவியுடன் தொடர்புடைய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் உடல், உள ரீதியான தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

iv. **வேறு தகைமைகள்**
- விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருத்தல்.
- விண்ணப்பதாரி சிறந்த விழுமியங்களைக் கொண்டவராக இருத்தல்.
- விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதியில் விண்ணப்பதாரி இப்பதவிக்குத் தேவையான சகல தகைமைகளையும் எல்லா வகையிலும் பூர்த்திசெய்திருத்தல்.

3. **சேவையில் ஈடுபடுவதற்கான நிபந்தனைகள் மற்றும் சேவை நிபந்தனைகள்**

i. இப்பதவி நிரந்தமானதாகும். ஓய்வூதியம் உரித்துடையதாகும். நீங்கள் உரித்துடைய ஓய்வூதிய முறைமை தொடர்பில் அரசினால் எதிர்காலங்களில் மேற்கொள்ளப்படும் கொள்கை அடிப்படையிலான தீர்மானங்களுக்கு நீங்கள் அடிபணிதல் வேண்டும். நீங்கள் விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய முறைமை/விதவைகள், தபுதாரர்கள், அநாதைகள் ஓய்வூதிய முறைமைக்கு பங்களிப்பு செய்தல் வேண்டும். அரசாங்கத்தினால் அவ்வப்போது நியமனம் செய்யப்படும் முறைமைக்கு ஏற்றவாறு பங்களிப்பு நிதியத்தைச் செலுத்துதல் வேண்டும்.

ii. இப்பதவியானது 03 வருட கால தகுதி காண் காலத்திற்கு உட்பட்டதாகும். பதவியில் இணைத்துக் கொள்ளப்பட்டு 03 வருட காலப்பகுதிக்குள் ஆட்சேர்ப்புத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டதற்கிணங்க முதலாவது வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

iii. 2020.10.16 ஆம் திகதியிடப்பட்ட பொது நிர்வாகச் சுற்றறிக்கை இல. 16/2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள விதிகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளின்படி, இந்த பதவிக்கு நியமிக்கப்பட்டு மூன்று ஆண்டுகள் முடிவடைவதற்கு முன்னதாக, அவர் பதவிக்கு நியமிக்கப்பட்ட மொழிக்கு மேலதிகமாக அவர் மற்றைய அரச கரும மொழியில் உரிய சித்தியினை பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

iv. பொதுச் சேவை ஆணைக்குழுவின் சேவைப் பிரமாணக் குறிப்பு, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை, நிதி ஒழுங்குகள், நீதி அமைச்சின் நிறைவேற்று சேவைப் பிரிவின் (சட்ட அலுவலர்) ஆட்சேர்ப்பு நியமங்களில் குறிப்பிடப்பட்டிருக்கும் ஏற்பாடுகள் மற்றும் திணைக்கள அடிப்படையிலான ஏனைய கட்டளைகள் அனைத்திற்கும் இப்பதவி கட்டுப்பட்டதாகும்.

v. விண்ணப்பித்த மொழி மூலத்தை பின்னர் எச்சந்தர்ப்பத்திலேனும் மாற்றுவதற்கு அனுமதிக்கப்படாது, மேலும், நீங்கள் விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள மொழி மூலமானது நீங்கள் நியமனம் பெற தகுதியுடைய மொழி மூலமாக இருக்கும்.

4. **வயதெல்லை**

விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் இறுதித் திகதியன்று விண்ணப்பதாரியின் வயதானது 21 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

5. **சம்பள அளவுத் திட்டம்**

2026.02.25 ஆம் திகதிய 03/2016 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை அட்டவணை I இன் படி, இப்பதவிக்குரிய மாதாந்த சம்பள அளவுத் திட்டமானது, ரூபா 47,615 - 10×1,335 - 8 × 1,630-17 ×2,170 - ரூபா 110,895.00 (SL-1-2016) ஆகும்.

6. தகுதிகாண் மதிப்பீட்டு நேர்முகத் தேர்வில் பின்வரும் முறையில் புள்ளிகள் வழங்கப்படும்.

| தொடர் இல. | விடயம் | புள்ளிகள் | மொத்தப் புள்ளிகள் |
|---|---|---|---|
| 01 | **மேலதிக கல்வித் தகைமைகள்**<br>(ஆகக் கூடிய தகைமைகளின் பொருட்டு மாத்திரமே புள்ளிகள் வழங்கப்படும். | | 25 |
| | (அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் மூலம் அங்கீகரிக்கப் பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பெற்றுக் கொள்ளப்பட்ட சட்டம் தொடர்பான பட்டப் பின்படிப்பு | 25 | |
| | (ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் மூலம் அங்கீகரிக்கப் பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பெற்றுக் கொள்ளப்பட்ட சட்டம் தொடர்பான பட்டப் பின்படிப்பு டிப்ளோமா அல்லது இலங்கை சட்டக் கல்லூரி, நீதி தொடர்பான உயர் கல்வி நிறுவனம் ஒன்றில் பெற்றுக் கொண்ட பட்டப் பின்படிப்பு டிப்ளோமா | 20 | |
| | (இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் மூலம் அங்கீகரிக்கப் பட்ட பல்கலைக்கழகத்தில் இருந்து,<br>✓ முதலாம் வகுப்புடன் கூடிய சட்டம் தொடர்பான பட்டம்<br>✓ இரண்டாம் வகுப்புக்கு மேல் சித்தியுடன் கூடிய சட்டம் தொடர்பான பட்டம்<br>✓ வகுப்பு ஒன்றுடன் கூடிய சட்டம் தொடர்பான பட்டம்<br>✓ சட்டம் தொடர்பான சாதாரண பட்டம் | 15<br>10<br>07<br>05 | |
| | (ஈ) சட்டக் கல்லூரி இறுதி வருடத்தில் முதலாம் வகுப்பு சித்தி<br>சட்டக் கல்லூரி இறுதி வருடத்தில் இரண்டாம் வகுப்பு சித்தி<br>**குறிப்பு** - சட்டக் கல்லூரி இறுதியாண்டு பரீட்சையில் கௌரவ சித்தி பெற்றிருந்தால் மாத்திரமே மேற் கூறிய 05 புள்ளிகள் வழங்கப்படும். | 10<br>05 | |

| தொடர் இல. | விடயம் | புள்ளிகள் | மொத்தப் புள்ளிகள் |
|---|---|---|---|
| 02 | **மேலதிக அனுபவம்**<br>வழக்குகளுடன் தொடர்புடைய ஆவணங்கள் தயாரித்தல் மற்றும் திறந்த நீமன்றத்தில் வாதிடுதல் | | 35 |

| | வழக்குத் தாக்கல் செய்தல் தொடர்பில் புள்ளிகள் (ஒரு வழக்கிற்கு) | நீதிமன்றத்தில் தோன்றி வாதிடுதல் தொடர்பில் புள்ளிகள் (ஒரு வழக்கிற்கு) |
|---|---|---|
| உயர் நீதிமன்றம் | 2 | 5 |
| மேன்முறையீட்டு நீதிமன்றம் | 2 | 4 |
| மேல் நீதிமன்றம் | 2 | 3 |
| மாவட்ட நீதிமன்றம் | 4 | 5 |
| தொழில் நியாய சபை | 2 | 3 |

**குறிப்பு –** மேற்கண்ட தகைமைகளை நிரூபிக்க, சம்பந்தப்பட்ட வழக்குத் தீர்ப்புகளின் பிரதிகள் அல்லது இறுதியாக வழக்கு இடம்பெற்ற திகதிக்கான வழக்கறிக்கையின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியினை நேர்முகத் தேர்வுக் குழுவிடம் சமர்பித்தல் வேண்டும்.

| தொடர் இல. | விடயம் | புள்ளிகள் | மொத்தப் புள்ளிகள் |
|---|---|---|---|
| 03 | **தகவல் தொழில்நுட்பம் /தகவல் தொழில்நுட்ப நீதி தொடர்பான அறிவு** | | 10 |
| | (அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டப் படிப்பின் போது தகவல் தொழில்நுட்பம் அல்லது கணினி விஞ்ஞானத்தினை ஒரு பாடமாகப் பயின்று இருத்தல். | 10 | |
| | (ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில், இலங்கைச் சட்டக் கல்லூரியில் அல்லது அரசினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில் தகைமை கொண்ட நிறுவனம் ஒன்றில் பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப நீதி தொடர்பான டிப்ளோமா | 08 | |
| | (இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் கணினி விஞ்ஞானம் அல்லது தகவல் தொழில்நுட்பம் தொடர்பில் பெற்றுக் கொண்ட டிப்ளோமா அல்லது வேறு நிறுவனம் ஒன்றில் கணினி விஞ்ஞானம் அல்லது தகவல் தொழில்நுட்பம் தொடர்பில் NVQ 5 அல்லது அதற்கு மேல் மட்ட நிலையில் பெற்றுக் கொண்ட டிப்ளோமா | 05 | |
| | (ஈ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில், இலங்கை சட்டக் கல்லூரியில் அல்லது அரசினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில் தகைமை கொண்ட நிறுவனம் ஒன்றில் தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப நீதித் துறையில் பாடநெறி ஒன்றினை பின்பற்றியிருத்தல் /பயிற்சிப் பாடநெறிகளில் பங்குகொண்டு பெற்றுக் கொண்ட சான்றிதழ் (அதிகபட்சம் இரண்டு சான்றிதழ்கள். ஒரு சான்றிதழுக்கு 02 புள்ளிகள் வழங்கப்படும்) | 04 | |
| | **குறிப்பு–** ஆகக் கூடிய தகைமைக்கு மாத்திரமே புள்ளிகள் வழங்கப்படும். | | |

| தொடர் இல. | விடயம் | புள்ளிகள் | மொத்தப் புள்ளிகள் |
|---|---|---|---|
| 04 | **மொழி ஆளுமை**<br>(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் இருந்து ஆங்கில மொழியினை பிரதான பாடமாக பயின்று பெற்றுக் கொண்ட பட்டம்<br><br>(ஆ) அங்கீகரிக்கப்பட்ட தேசிய அல்லது சர்வதேச மட்டத்தில் (Moot Court Competitions) வரை காணப்படும் ஆங்கில மொழிப் புலமை.<br><br>தனியாள்<br>i. முதலாம் இடம் (சிறப்புத் தகுதி) - 12<br>ii. இரண்டாம் இடம் - 10<br>iii. மூன்றாம் இடம் (ஏனைய தகைமைகள்) - 08<br>குழு<br>i. முதலாம் இடம் (சிறப்புத் தகுதி) - 12<br>ii. இரண்டாம் இடம் - 10<br>iii. மூன்றாம் இடம் (ஏனைய தகைமைகள்) - 08<br><br>(இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் ஆங்கில மொழியில் பெற்றுக் கொண்ட டிப்ளோமா அல்லது வேறு நிறுவனம் ஒன்றில் SLQF 03 அல்லது அதற்கு மேற்பட்ட டிப்ளோமா அல்லது அரச நிறுவனம் ஒன்றில் அல்லது அரசோடு இணைந்த நிறுவனம் ஒன்றில் 1500 மணித்தியாலங்கள் கொண்ட பாடநெறி ஒன்றினைப் பயின்று அதன் மூலம் பெற்றுக் கொண்ட டிப்ளோமா.<br><br>(ஈ) க.பொ.த. (உயர் தரப்) பரீட்சையில் (தேசிய / இலண்டன்) ஆகக் குறைந்தது திறமைச் சித்தி ஒன்றினைப் பெற்றுக் கொண்டிருத்தல் அல்லது IELTS பரீட்சையில் மொத்தப் புள்ளிகள் 6.5 அல்லது அதற்கு மேல், TOFEL – IBT 79 அல்லது அதற்கு மேல், TOFEL – CBT 213 அல்லது அதற்கு மேல்,TOFEL – PBT 550 அல்லது அதற்கு மேற்பட்டது.<br><br>(உ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் ஆங்கில மொழி தொடர்பில் பெற்றுக் கொண்ட உயர் சான்றிதழ் அல்லது வேறு நிறுவனம் ஒன்றில் ஆங்கில மொழி தொடர்பில் SLQF 2 மட்டத்தில் பெற்றுக் கொண்ட சான்றிதழ்.<br><br>**குறிப்பு**– ஆகக் கூடிய தகைமைக்கு மாத்திரமே புள்ளிகள் வழங்கப்படும். | 15<br><br><br><br>12<br><br><br><br><br><br><br><br><br><br><br><br>10<br><br><br><br><br><br><br><br>08<br><br><br><br><br><br>05 | 15 |
| 05 | நேர்முகத் தேர்வின்போது வெளிக்காட்டும் திறன்<br><br>பதவிக்குரிய வகிபாகத்தை நிறைவேற்றுவதற்கு உரிய விண்ணப்பதாரரின்,<br>✓ வலிமை கேள்விகள் (strength questions)<br>✓ சூழ்நிலைக்கு ஏற்ப முடிவுகளை எடுக்கும் திறன் (situational questions) மற்றும்<br>✓ திறன் கேள்விகள் (competency questions) | <br><br><br>02<br>03<br><br>10 | 15 |

7. **விண்ணப்பதாரியின் அடையாளம்**:

அனைத்து வகையிலும் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை அனுப்பி வைக்கும் விண்ணப்பதாரிகள் மாத்திரமே தகுதிகாண் மதிப்பீட்டு நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படுவார்கள்.

நேர்முகத் தேர்வின்போது சகல சான்றிதழ்களினதும் மூலப் பிரதி மற்றும் விண்ணப்பதாரியின் மூலம் அத்தாட்சிப்படுத்தப்பட்ட நிழற் பிரதிகள் என்பன முன்வைக்கப்பட வேண்டும்.

நேர்முகத் தேர்வின்போது தங்களுடைய ஆளடையாளத்தை அத்தாட்சிப்படுத்துவதற்கு பின்வரும் ஆவணங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

i. ஆட்களை பதிவு செய்யும் ஆட்பதிவு ஆணையாளரால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் தேசிய ஆளடையாள அட்டை

ii. அங்கீகரிக்கப்பட்ட கடவுச் சீட்டு

8. **விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முறை**

(i) விண்ணப்பங்கள் 06.07.2024 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் "செயலாளர், சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு, காணிப் பிரிவு, "மிஹிகெத்த மெதுர" காணிச் செயலகம் , இலக்கம் 1200/6, ரஜமல்வத்த வீதி, பத்தரமுல்ல" என்னும் முகவரிக்கு கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்பட வேண்டும். குறித்த திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(ii) அனுப்பிவைக்கப்பட வேண்டிய விண்ணப்பப்படிவத்தின் மாதிரி இந்த அறிவித்தலின் பிற்பகுதியில் இணைக்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரிகள் தங்களுடைய விண்ணப்பப் படிவத்தை A4 கடதாசியில் 01 முதல் 03 வரை முதலாம் பக்கத்திலும், 04 முதல் 07 வரை இரண்டாம் பக்கத்திலும், 08 முதல் 11 வரை மூன்றாம் பக்கத்திலும் அமையுமாறு தயார்செய்து தமது சொந்த கையெழுத்தில் பூர்த்திசெய்தல் வேண்டும்.

(iii) விண்ணப்பம் அடங்கிய தபாலுறையில் வலது பக்க மேல் மூலையில் "சட்ட அலுவலர் தரம் - III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல்" எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

(iv) விண்ணப்பப் படிவத்தில் உள்ள விண்ணப்பதாரரின் கையொப்பமானது, அரச பாடசாலையொன்றின் அதிபர் / சமாதான நீதவான்/ சத்தியப் பிரமாண ஆணையாளர் / சட்டத்தரணி / பிரசித்த நொத்தாரிஸ் / முப்படைகளின் அதிகாரம் பெற்ற உத்தியோகதத்தர் அல்லது அரசு அல்லது மாகாண அரச பணியில் நிரந்தர பதவியில் உள்ள இணைந்த மாதாந்த சம்பளம் ரூபா 47,615.00 அல்லது அதற்கு கூடிய சம்பளம் பெறுகின்ற அலுவலரினால் சான்றுப்படுத்தப்படல் வேண்டும்.

(v) தற்போது அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் பணியாற்றும் உத்தியோகத்தர்கள் தங்களுடைய விண்ணப்பத்தினை தாங்கள் பணியாற்றும் திணைக்களத்தின் தலைவரினூடாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

(vi) இங்கே இணைக்கப்பட்டிருக்கும் மாதிரி விண்ணப்பப்படிவத்தின் வடிவமைப்பிற்கு இணங்காத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி இரத்துச் செய்யப்படும். தொலைந்து போன மற்றும் தாமதமாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் தொடர்பில் கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

9. **போலியான தகவல்களை முன்வைத்தல்**

ஆட்சேர்ப்புக்கு முன் உங்களால் அனுப்பிவைக்கப்படும் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் பொய்யானவை அல்லது தவறானவை என கண்டறியப்பட்டால், உங்களது விண்ணப்பமானது இரத்துச் செய்யப்படும் என்பதோடு, ஆட்சேர்ப்புக்குப் பின்னர் இதுபோன்ற பொய்யான அல்லது தவறான தகவல் கண்டறியப்பட்டால், உரிய நடைமுறைகளுக்கு உட்பட்டு பதவி நீக்கம் செய்யப்படுவதற்கு ஆளாவீர்கள்.

10. வெற்றிடத்தை நிரப்புதல் அல்லது நிரப்பாது விடுதல் தொடர்பிலான அதிகாரம் பொதுச் சேவைகள் ஆணைக்குழுவிற்கு உரித்துடையதாகும்.

11. இந்த வர்த்தமானி அறிவித்தலில் தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிபெயர்ப்புகளுக்கு இடையில் ஏதாவது முரண்பாடு அல்லது வேறுபாடு காணப்படுமாயின் சிங்கள மொழி மூலமே மேலானதாகக் கருதப்படும்.

12. இந்த அறிவித்தலில் குறிப்பிடப்படாத ஏதாவதொரு விடயம் தொடர்பாக அல்லது இந்த ஆட்சேர்ப்பு செயல்முறையில் ஏதேனும் சிக்கலான சூழ்நிலை ஏற்பட்டால், பொதுச் சேவைகள் ஆணைக்குழு எடுக்கும் தீர்மானமே இறுதியாக இருக்கும்.

பொதுச் சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

எச். எம். பீ. பீ. ஹேரத்,
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**காணி அமைச்சின் நிறைவேற்று சேவை வகையீட்டின் தரம் III இனைச் சேர்ந்த சட்ட உத்தியோகத்தர் பதவிக்கு (திறந்த) அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்தல் - 2024**

[ ]

அலுவலகப் பாவனைக்கு மாத்திரம்

(விண்ணப்பிக்கும் மொழிக்குரிய இலக்கத்தினை கூட்டில் இடவும்)

சிங்களம் - 2/ தமிழ் - 3/ ஆங்கிலம் - 4 [ ]

குறிப்பு— விண்ணப்பிக்கும் மொழி மூலத்தினை மாற்றம் செய்ய முடியாது.

---

1.0 1.1 முழுப் பெயர் (திரு / திருமதி / செல்வி) : ......................................................

(சிங்களத்தில் / தமிழில்) : ......................................................

1.2 முழுப் பெயர் : ......................................................

(ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்)

1.3 முதலெழுத்துக்களுடன் பெயர் (திரு / திருமதி/ செல்வி): ........................................
(சிங்களத்தில் / தமிழில்) உதாரணம்: எம். ஜீ. பீ. எஸ். கே. குணவர்த்தன

1.4 முதலெழுத்துக்களுடன் பெயர் : ......................................................
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்)

2.0 2.1 நிரந்தர முகவரி : ......................................................

(சிங்களத்தில் / தமிழில்)

2.2 நிரந்தர முகவரி :......................................................

(ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்)

3.0 3.1 பால்நிலை: ஆண் 0 பெண் 1 [ ] (உரிய இலக்கத்தினை கூட்டினுள் இடவும்)

3.2 விவாக நிலை: [ ] (உரிய இலக்கத்தினை கூட்டினுள் இடவும்)
விவாகமானவர் - 0
விவாகமாகாதவர் -02

3.3 பிறந்த திகதி: வருடம் : [ | | | ] மாதம் : [ | ] திகதி : [ | ]

3.4 06.07.2024 ஆம் திகதியன்று வயது: வருடம் : [ | ] மாதம் : [ | ] திகதி : [ | ]

3.5 தேசிய அடையாள அட்டை இலக்கம்: [ | | | | | | | | | | | ]

4.0 4.1 தொலைபேசி இலக்கம்: நிலையானது : [ | | | | | | | | | ]

கையடக்க : [ | | | | | | | | | ]

5.0 **கல்வித் தகைமைகள்**:

5.1 பட்டம் | தகைமையினைப் பெற்ற நிறுவனம் | திகதி

…………………… ………………………. ……………………
………………… ………………………. ……………………

6.0 உச்ச நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியப் பிரமானம்செய்து கொண்ட திகதி : ………………

6.1 உச்ச நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டதன் பின்னர் 03 வருட அனுபவத்தைப் பூர்த்திசெய்த திகதி: ……………….

6.2 அரச நிறுவனம் ஒன்றில் சட்டம் தொடர்பான பதவி ஒன்றில் 03 வருட கால அனுபவத்தை பூர்த்திசெய்த திகதி: …………………………

*அடிப்படைத் தகைமைகளை நிரூபிக்கும் சான்றிதழ்கள் / ஆவணங்கள் விண்ணப்பதாரியினாலேயே அத்தாட்சிப்படுத்தப்பட்டு விண்ணப்பத்துடன் இணைக்கப்படல் வேண்டும்.

7.0 விண்ணப்பங்கள் கோரப்படுகின்ற அறிவித்தலில் இலக்கம் 06 இன் கீழ் பெற்றுக்கொள்ளப்படும் ஒவ்வொரு தகைமைகள் தொடர்பான விபரங்கள்:

7.1 மேலதிக கல்வித் தகைமைகள்:
…………………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………………………
……………………………………………………………………………………….…

7.2 மேலதிக தொழிற் தகைமைகள்:
…………………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………….…

7.3 தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் தொடர்பான அறிவு:
…………………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………….…

7.4 மொழித் திறன்கள்:
…………………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………….…

* மேலதிக தகைமைகளை நிரூபிக்கும் ஆவணங்களை விண்ணப்பத்தோடு அனுப்பி வைப்பது அவசியமன்று. நேர்முகத் தேர்வின்போது அத்தகைய ஆவணங்களை முன்வைப்பதற்கு தயார்படுத்தி வைத்துக்கொள்வது விண்ணப்பதாரியின் கடமையாகும்.

8.0 நீங்கள் என்றாவது நீதிமன்றம் ஒன்றினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா?
(ஆம் எனில், விபரங்களைக் குறிப்பிடவும்)
………………………………………………………………………………………………..

9.0 **விண்ணப்பதாரியின் உறுதியுரை** :
இவ்விண்ணப்பத்தில் என்னால் முன்வைக்கப்படும் தகவல்கள் உண்மையானவை என்பதையும் பிழையற்றவை எனவும் விண்ணப்பத்தின் அனைத்து பகுதிகளும் முறையாக பூர்த்திசெய்யப்பட்டுள்ளன என்பதையும் என்னால் முன்வைக்கப்படும் இத்தகவல்கள் பொய்யானவை என இப்பதவியில் நியமிக்கப்படுவதற்கு முன்னர் உறுதிப்படுத்தப்பட்டால் இப்பதவிக்கு நான் தகுதியற்றவராவேன் என்பதையும், பதவியில் நியமிக்கப்பட்டதன் பின்னர் உறுதிப்படுத்தப்பட்டால் பதவியிலிருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நானறிவேன் என்றும் இங்கு குறிப்பிடப்பட்டிருக்கும் அனைத்து சட்டதிட்டங்களுக்கும் நான் கட்டுப்படுவேன் என்றும் இத்தால் உறுதியளிக்கின்றேன்.

……………………………… ……………………………………………
திகதி விண்ணப்பதாரியின் கையொப்பம்

*10.0* **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்துதல்**

இந்த விண்ணப்பத்தை முன்வைக்கும் திரு. /திருமதி/செல்வி ......................................................... என்பவரை நான் தனிப்பட்ட முறையில் நன்கறிவேன் எனவும், அவர் என் முன்னிலையில் கையொப்பமிட்டார் எனவும் சான்றுப்படுத்துகின்றேன்.

...................................................

கையொப்பத்தினை சான்றுப்படுத்தும் உத்தியோகத்தரின் கையொப்பம்.
முழுப் பெயர்:
பதவிப் பெயர்:
திகதி:
(உத்தியோகப்பூர்வ இலச்சினையினை இடவும்)

*11.0* **நிறுவனத் தலைவரின் பரிந்துரை** (அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களுக்கு மட்டும்)

மேற்குறிப்பட்ட தகவல்களைக் வழங்கியுள்ள திரு./ திருமதி / செல்வி .................................. இந்த நிறுவனத்தில் பணியாற்றுகின்றார் என்றும், அவர் வழங்கிய தகவல்கள் உண்மையானவை எனவும், அவரின் கடமை மற்றும் வருகை என்பன திருப்திகரமாக உள்ளன என்றும், அவர் மீது எவ்வித குற்றச்சாட்டும் இல்லை என்றும், இந்த பதவிக்கு அவர் தேர்தெடுக்கப்பட்டால், இந்த நிறுவனத்தின் சேவையிலிருந்து விடுவிக்கலாம் எனவும் நான் சான்றளிக்கின்றேன்.

திணைக்கள / நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

பெயர்:
பதவி:
முகவரி:
திகதி:
(உத்தியோகப்பூர்வ இலச்சினையினை இடவும்)

*06-16*

---

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## அரசாங்க சேவை ஆணைக்குழு

சுற்றுலாதுறை மற்றும் காணி அமைச்சு

### காணி உபயோக கொள்கை திட்டமிடல் திணைக்களத்தின் நிறைவேற்று சேவை தொகுதியில் திணைக்களத்துடனான தரம் III இன் உதவிப் பணிப்பாளர் (பயிராக்கவியல்) பதவிக்கான மட்டுப்படுத்திய போட்டிப் பரீட்சை - 2024

இத் திணைக்களத்தில் நிறைவேற்று சேவைத் தொகுதியில் தரம் III இன் உதவிப் பணிப்பாளர் (பயிராக்கவியல்) பதவியில் நிலவுகின்ற 01 வெற்றிடத்தை நிரப்புவதற்காக பின்வரும் தகைமைகளைக் கொண்டுள்ள அலுவலர்களிடமிருந்து அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப் படி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்தப் பரீட்சையானது, பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் செத்தெம்பர் மாதம் கொழும்பில் நடாத்தப்படும். இவ்வறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி படிவத்தின் பிரகாரம், விண்ணப்பங்களை பின்வரும் திகதியில் அல்லது அதற்கு முன்னர் "பரீட்சை ஆணையாளர் நாயகம், தாபன பரீட்சை ஒழுங்கமைப்புக் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், த.பெ.1503, கொழும்பு" என்ற முகவரிக்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "காணி உபயோக கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் (பயிராக்கவியல்) பதவிக்கான மட்டுப்படுத்திய போட்டிப் பரீட்சை – 2024" என்று தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

(அ) விண்ணப்பங்கள் பொறுப்பேற்கும் இறுதித் திகதி 2024.06.28 ஆகும்.

**குறிப்பு**: விண்ணப்பப்படிவம் அல்லது அது தொடர்பான கடிதமொன்று தபாலில் காணாமல் போதல் அல்லது தாமதமாதல் தொடர்பாக கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது. இறுதி திகதி வரை விண்ணப்பங்களை தாமதப்படுத்துவதால் ஏற்படக் கூடிய இழப்பினை விண்ணப்பத்தாரியே ஏற்றுக்கொள்ளல் வேண்டும்.

1. **சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் முறை :**

*அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள தகைமைகளை பூர்த்தி செய்கின்ற விண்ணப்பத்தாரிகள் எழுத்திலான பரீட்சைக்கு உட்படுத்தப்படுவார்கள். எழுத்திலான பரீட்சையில் அதிகூடிய திறமைகளை காட்டிய விண்ணப்பதாரிகள், வெற்றிடங்களின் எண்ணிக்கை போன்று 05 மடங்கினை ஆங்கில அகராதியின் ஒழுங்கு முறைப்படி தயாரிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கான பெயர் அட்டவணையை கொண்டு நடாத்தப்படும் அமைவு முறையிலான நேர்முகப் பரீட்சைக்கு தோற்றுதல் வேண்டும். பின்னர் எழுத்திலான பரீட்சையிலும், நேர்முகப்பரீட்சையிலும் பெற்றுக்கொண்ட மொத்த புள்ளிகளின் அடிப்படையில் அதிகூடிய புள்ளிகளை பெற்றுக்கொண்ட விண்ணப்பத்தாரி களிடமிருந்து அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் திறமையின் ஒழுங்குமுறைக்கமைவாக பொருத்தமான விண்ணப்பத்தாரிகளை ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.*

*நியமனம் செய்யப்படும் எண்ணிக்கை மற்றும் நியமனம் நடைமுறைப்படும் திகதி அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளையின் படி தீர்மானிக்கப்படும்.*

2. **சம்பள அளவுத் திட்டம் :**

*2016.02.25 ஆந் திகதிய 03/2016 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கையின் அட்டவணை 1 படி இந்த பதவிக்கு ஏற்புடையதான மாதச் சம்பள அளவுத் திட்டம் ரூபா 47,615.00-10 ×1,335-8 ×1,630-17×2170- ரூபா 110,895.00 (SL-1-2016) ஆகும்.*

3. **சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள்**

   i. *இப் பதவி நிரந்தரமானதும், ஓய்வூதிய உரித்துடையதுமாகும். விதவைகள் அநாதைகள் ஓய்வூதிய திட்டத்திற்கு உதவு தொகை செலுத்தல் வேண்டும்.*

   ii. *இப் பதவியில் நியமனம் பெறுகின்ற அலுவலர்கள் ஓராண்டு காலத்திற்கு பதில் கடமையாற்றுவதற்கு உட்படுவார்கள்.*

   iii. *அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 08/2020 இற்கும், அதனுடன் அமைந்தொழுகும் சுற்றுநிருபங்களின் பிரகாரம், பதவியில் சேர்ந்து 03 ஆண்டுக்குள் அரச கரும மொழி தேர்ச்சியை ஏற்றவாறு பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.*

   iv. *அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவைக்கும், அரசாங்க நிதி ஒழுங்குவிதிகளுக்கும், திணைக்களத்தின் ஏனைய கட்டளைகளுக்கும் இந்த நியமனம் ஒழுங்கமையும்.*

4. **கல்வித் தகைமைகள் :**

*பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் விவசாயம் தொடர்பான பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.*

5. **அனுபவம் :**

   i. *காணி உபயோக கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்தில், காணி உபயோக திட்டமிடல் அலுவலர் பதவியில் அல்லது காணி உபயோக திட்டமிடல் அலுவலர் பதவியில் கடமைகளுக்கு இணையான கடமைகளை ஒப்படைத்திருக்கும், மேற்படி திணைக்களத்திடம் இணைக்கப்பட்டுள்ள அபிவிருத்தி அலுவலராதல் வேண்டும்.*

   ii. *காணி உபயோக கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்தில் ஐந்து (05) ஆண்டுகள் செயலூக்கமிக்க மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.*

   iii. *சேவையில் நிரந்தப்படுத்தியுள்ள அலுவலராதல் வேண்டும்.*

6. **உடற்றகைமைகள் :**

   i. *ஒவ்வொரு விண்ணப்பத்தாரியும் இலங்கையில் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும்,*

   ii. *பதவியில் கடமைகளை நிறைவேற்றுவதற்கு போதுமான அளவு உடல் உள ஆரோக்கியத்தையும் கொண்டிருத்தல் வேண்டும்.*

7. **வயதெல்லை:** *தற்போது அரச சேவையில் ஈடுபட்டுள்ளவர்களாவதால் வயதெல்லை ஏற்புடையதாகாது.*

8. **ஏனைய தகைமைகள் :**

   i. *விண்ணப்பத்தாரி இலங்கைப் பிரசையாதல் வேண்டும்;*

